இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 16 | திகதி : 29.10.2023 | விலை : 50.00



## போர் என்பது எப்போதும் தோல்வியைத்தான் தரும் காசாவில் அமைதிக்கான வழிகள் திறக்கப்படட்டும்!

### - திருத்தந்தை பிரான்சிஸ்

காசாவில் அமைதிக்கான வழிகள் திறக்கப்படவும், போரால் பாதிக்கப்பட்டுள்ள அம்மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தொடர்ந்து கிடைக்கவும், பணயக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவும் தான் வேண்டுகோள் விடுப்பதாகக் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்

அக்டோபர் 22, வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த பல்வேறு நாட்டுத் திருப்பயணிகளுக்கு வழங்கிய மூவேளைச் செப உரையில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை, இப்போரால் தான் மிகவும் கவலையும் வருத்தமும் அடைந்துள்ளதாகவும் துன்பப்படுபவர்கள், பணயக் கைதிகள், காயமடைந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவருடனும் தான் செபத்தில் ஒன்றித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

உக்ரைன் உட்பட உலகில் நிகழும் எல்லாப் போர்களைக் குறித்தும் தான் நினைவுகூர்வதாகவும், போர் என்பது எப்போதும் தோல்வியைத்தான் தரும் என்றும் அது மனித உடன்பிறந்த உறவின் அழிவு என்றும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், (7ம் பக்.)

## யாழ் மறைமாவட்டத்திற்குத் திருத்தொண்டர்களாக இருவர்



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் திருத்தொண்டர் திருநிலைப்படுத்தல் திருப்பணிகள் வழங்கல் மற்றும் குருத்துவ வேட்பாளராக ஏற்றுக்கொள்ளும் திருச்சடங்குகள் கல்லூரி அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 12ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி சிற்றாலயத்தில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு திருப்பலியில் அருட்சகோதரர்களான பீற்றர் அமலதாஸ் கமல்ராஜ் மற்றும் யேசுரத்தினம் அன்ரன் கஜீஸ்காந்த் ஆகியோர் திருத்தொண்டர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

அத்துடன் யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, சிலாபம், பதுளை ஆகிய மறைமாவட்டங்களையும் பிரான்சிஸ்கன் சபையையும் சேர்ந்த 12 அருட்சகோதரர்களுக்குப் பீடத்துணைவர்கள், வாசகர்கள், குருத்துவ வேட்பாளர் திருப்பணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

## செபமாலைக் கன்னியர் சபைக்கு புதிய உயர் தலைவியும் ஆலோசகர்



யாழ். மறைமாவட்ட ஆயரின் கீழ் இயங்கும் செபமாலைக் கன்னியர் தியான யோக சபையின் 10 ஆவது பொதுச் சங்கம் கடந்த இருவாரங்களாக வசாவிளான் கன்னியர் மடத்தில் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரின் வழிகாட்டலில் நடைபெற்று வருகின்றது. இவ்வமர்வில் அருட்பணி அலோசியஸ் றோய் அ.ம.தி. அவர்கள் ஆன்மீக வழிகாட்டியாகப் பங்கேற்கின்றார்.

இப் பொது அமர்வில் இத்துறவற சபையின் புதிய உயர் தலைவியும் அவருக்கான ஆலோசகர் குழுவும் தெரிவு செய்யப்பட்டு யாழ். ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை முன்னிலையில் பணிப்பொறுப்பேற்றுள்ளனர்.

புதிய உயர் தலைவியாக அருட்சகோதரி மேரி கெலேனா அவர்களும் உப உயர் தலைவியாக அருட்சகோதரி றோஸ்மேரி அவர்களும் ஆலோசகர்களாக அருட்சகோதரி மேரி பேமிலா (இலங்கை தென்பகுதி), அருட்சகோதரி மேரி மாசில்லா (இந்தியா), அருட்சகோதரி மேரி பவுலின் (இந்தியா), அருட்சகோதரி மேரி கீதா (இலங்கை வடபகுதி) ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

செபமாலைக் கன்னியர் சபையின் புதிய தலைமைத்துவத்தின் பணி சிறக்கப் பாதுகாவலன் வாசக நேயர்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## 'பின்காலனிய இலங்கையில் சமயங்களின் அரசியல்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை



ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் நினைவாக யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தால் வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆயர் தியோகுப்பிள்ளை நினைவுப்பேருரை 19ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி செல்வமனோகரன் அவர்கள் கலந்து 'பின்காலனிய இலங்கையில் சமயங்களின் அரசியல்' என்ற தலைப்பில் இவ்வருடத்திற்கான நினைவுப்பேருரையை ஆற்றினார். இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். குருக்கள், துறவிகள் குரு மட மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



கரம்பொன் - மெலிஞ்சிமுனைப்பங்கில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு 16ஆம் திகதி பங்குத்தந்தை அருட்தந்தை தயாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலயத்தில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை.. (7ம் பக்.)

## பொதுநிலையினருக்கான வலுவூட்டல் நிகழ்வு



'கூட்டொருங்கியக்கம் - விவிலியப்பார்வையில்' என்னும் தலைப்பில் பொதுநிலையினர் வலுவூட்டலை நோக்காகக்கொண்டு கிளறேசியன் சபை விவிலியப் பணியகத்தால் முன்னெடுக்கப்பட்ட விவிலிய மாநாடு 21ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மறைக்கல்வி நடுநிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பணியக இயக்குநர் அருட்தந்தை றொனால்ட் சுஜீவன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விவிலியப் பார்வையில் பங்கேற்பு, ஒன்றிப்பு, பணி என்னும் தலைப்புக்களில் கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் அஞ்சல் வழி விவிலியக் கல்வியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் கிளறேசியன் வெளியீட்டகத்தினால் முன்னெடுக்கப்படும் புத்தகக் கண்காட்சி 21 ஆம் திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதி வரை மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பின் 2025ம் ஆண்டு யூபிலி “நம்பிக்கையின் திருப்பயணிகள்”

## யூபிலி விழாவிற்கான இலங்கைத் திருஅவையின் முன்னெடுப்புகள்

***கத்தோலிக்க திருஅவையின் வத்திக்கான் யூபிலி ஆணைக்குழுவின் திட்டங்களிற்கு அமைவாக இலங்கையின் மறை மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குருக்கள், இலங்கைத் திருஅவைக்கான தேசிய ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடாத்திய இரண்டு ஆயர்கள், மறையறிவிப்புத் தேசிய ஆணைக்குழு இயக்குநர் என்று அமைக்கப்பட்ட விசேட தேசிய யூபிலி ஆண்டு செயற்பாட்டுத் திட்டக்குழுவினரால் மறைமாவட்ட செயற்பாடுகளுக்காக முன்வைக்கப்பட்ட விடயங்கள்.***

1. 2023/2024 யூபிலி ஆண்டிற்கான ஆயத்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

2. 2025ம் ஆண்டை யூபிலி ஆண்டாக அனுசரித்தல்.

2025 ஆம் ஆண்டு - யூபிலி புனித ஆண்டுப் பிரகடனம்- 2024 மறைபரப்பு ஞாயிறு முதல் 2025 மறைபரப்பு ஞாயிறு வரை.

இலங்கை மறைமாவட்டங்களில் ஆயத்த செயற்பாடுகள் 2023 மறைபரப்பு ஞாயிறுடன் ஆரம்பமாகும்.

யூபிலி 'பனர்', செபம்/பாடல் அடங்கிய பிரசுரம் என்பன பொதுவாக அச்சிடப்பட்டு மறைமாவட்டங்க ளிற்கு யூபிலித் திட்டக்குழுவினரால் குறைந்த விலை யில் வழங்கப்படும்.

பாடல் மும்மொழிகளிலும் ஒரே இசையில் மக்கள் பாடுவதற்கு ஏற்ப பொதுவானதாக வழங்கப் படும்.

யூபிலி ஆண்டு பற்றிய விளக்கம் தேசிய ஆணைக்குழுவினால் வழங்கப்படும் மேய்ப்புபணி திருமடலிலே பொதுவானதாக அனைத்து மறை மாவட்டங்களிற்கும் வழங்கப்படும். குடும்ப சந்திப்பு களின் போது வீடுகளில் ஒட்டுவதற்கு ஸ்ரிக்கர்களும் வழங்கப்படும்.

**விசேட செயற்றிட்டங்கள்**

2023 மார்கழி 25 ஆம் திகதி அல்லது 2024 தை 16 ஆம் திகதி யூபிலி செப ஆண்டை எமது மறைமாவட்டங்களில் பிரகடனப்படுத்தல்.

2023 முதல் 2024 வரை தெரிவு செய்யப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளை யூபிலி ஆண்டுடன் தொடர்புபடுத்தி விசேட செயற்றிட்டங்கள் பற்றி மறைமாவட்ட விசேட குழுக்களுடனும், மறைக்கோட்ட விசேட குழுக்களுடனும் பகிர்ந்து கலந்துரையாடல்.

**தெரிவு செய்யப்பட்ட 2 ஆம் வத்திக்கான் சங்கத் தொகுப்புகள்**

**1. இறைவார்த்தை**

பாரம்பரியம் (DV 7-10)

திருஅவையின் வாழ்வில் திருவிவிலியம் (DV 21-26)

**2.திருவழிபாடு**

- பங்குத்திருஅவைகளில் திருவழிபாட்டை வாழ் வாக்குதல் (SC 40-46)
- திருவருட்சாதனங்கள் (SC 59-81)
- ஞாயிறு திருவழிபாடு இறைவனின் கொடை (SC 102-106)
- திரு இசை (SC 112-121)

**3. திருஅவை**

- மறையறிவிப்பிற்கான திருஅவை (LG17)
- பொதுநிலையினர் (LG 30-38)
- நிறைவை நோக்கிய திருப்பயணிகளின் திருஅவை (LG48-51)
- தூய வாழ்வுக்கான அழைப்பு (LG 39-42)
- மரியாள் முதல் நம்பிக்கையாளர் (LG 52-69)

**4. இன்றைய உலகில் திருஅவை**

- இன்றைய உலகில் திருஅவை (GS 1-3)
- குடும்பம் (GS 47-52)
- பண்பாடு (GS 53-62)
- பொருளாதாரம் (GS 63-72)
- அரசியல் (GS 73-76)
- உரையாடல் (GS 83-93)
- அமைதி (GS77-82)

**மேற்படி இறைமக்களை வலுவூட்டும் திட்டத்தில் பங்கேற்க வேண்டிய ஆணைக்குழுக்கள்/குழுக்கள்.**

- மனித மேம்பாடு
- குடும்ப வளம்
- மறைக்கல்வி
- திருவழிபாடு
- பொதுநிலையினர்
- இளையோர்
- மறைபரப்புச் சபைகள்
- சமூகத்தொடர்பாடல் தொடர்பான ஆணைக்குழு

**இன்றைய உலகில் திருஅவை தொடர்பான கலந்துரை யாடலிற்கு முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள்.**

- பொருளாதார விருத்திக்கான வீட்டுத்தோட்ட வேலைத் திட்டங்கள், மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல்.
- மனித உரிமைகள்/ சமத்துவம் தொடர்பான வீதி நாடகங் கள், காட்சிப்படுத்தல்கள், சுவரொட்டிகள்
- அரசியல் தொடர்பான சமூகமட்ட விழிப்புணர்வுகள்.
- ஏழைகள் மட்டிலான பங்குமட்ட செயற்றிட்டங்கள்.
- அமைதி ஏற்படுத்தல் தொடர்பான கருத்தரங்குகள், குறும் படங்கள், காணொளிகள்
- பொதுநிலையினரை மீள வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்

**குடும்பம் தொடர்பான கலந்துரையாடல்கள்.**

- கருத்தரங்குகள், குறும்படங்கள், குறுநாடகங்கள்.
- சமூக வலைத்தளங்கள் பயன்பாடு.
- குடும்ப தினங்கள், குடும்ப சுற்றுலாக்கள், திருப்பயணங்கள்.

**இளையோர் வலுவூட்டல் தொடர்பானவை.**

- இளையோர் வலுவூட்டல் திட்டங்கள்.
- இளையோர் கருத்தரங்குகள் / ஒன்று கூடல்கள்
- வீதி நாடகங்கள், விழிப்புணர்வுகள்.
- போதை எதிர்ப்பு
- வேதாகமம் வினாவிடைப் போட்டிகள்
- விளையாட்டுக்கள்.
- சுற்றுலாக்கள்
- திருயாத்திரைகள்
- தியானங்கள்

**மறைக்கல்வி, திருவிவிலியம், திருவழிபாடு**

- விழிப்பூட்டும் வாரங்களை ஒழுங்கு செய்தல்/ கண் காட்சிகள்
- கருத்தரங்குகள், கலை நிகழ்வுகள்
- போட்டிகள்
- திருவருட்சாதனக் கொண்டாட்டங்களை சிறப்பாகத் தயார் செய்து அர்த்தமுள்ள விதத்தில் நிறைவேற்றல்.
- திருயாத்திரைகள்
- வழிப்பாட்டுக் கூட்டங்கள், வேதாகம பகிர்வுகள்
- பக்திச்சபைகளை மீள வலுவூட்டல்

**2024- செப ஆண்டு**

- மறைமாவட்டங்கள் அர்த்தமுள்ள பொருத்தமான பதாதைகளைத் தயார் செய்தல்.
- வத்திக்கானல் பரிந்துரைக்கப்பட்ட செப தலைப்புக்களை ஆலய விழா நவநாட்களில் மறையுரைகளில் பயன்படுத்தல்.
- குடும்பம், இளையோர், சிறுவர், பக்திச் சபைகளுக்கு
- பொருத்தமான செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்.

**பங்கு, மறைக்கோட்ட, மறைமாவட்ட மட்டங்களில் யூபிலி ஆண்டு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத் தும் வழிகள்**

- சமூக வலைத்தளங்கள், காணொளிகள்
- முகநூல், வற்சப் குழுக்கள்
- கலை, கலாசார நிகழ்வுகள், வீதி நாடகங்கள்
- பனர்கள், ஸ்ரிக்கர்கள் தொடர்பாடல் சாதனங்கள்
- மறைமாவட்ட தொலைக்காட்சி/ பத்திரிகைகள்
- மறையாசிரியர்கள், குருமட மாணவர்களைப் பயன்படுத்தல்.
- யூபிலி சின்னத்தைப் பொதுவாகப் பயன்படுத்தல் (தொலைக்காட்சி/ காணொளிகள்/ பத்திரிகைகள்/ திருப்பலி ஆடைகள்/ திருவிழா பதாதைகள்.........)

**2025 யூபிலி ஆண்டு செயற்றிட்டங்கள்**

- மறைமாவட்ட யூபிலித் திட்டக்குழுவினரால் தயார் செய்யப்பட்ட திட்டங்களை ஆயரின் அனுமதியு டன் நடைமுறைப்படுத்தல்.
- குடும்பம்/ சிறுவர்/ இளையோர்/ பக்திச்சபைகள்/
- முதியோர் போன்ற குழுக்களிற்கான யூபிலி நிகழ்ச்சித்திட்டங்கள் (திருப்பயணங்கள்/ ஒன்றுகூடல்கள்/ விழாக்கள்)
- ஆன்மீகப் புதுப்பித்தல், நம்பிக்கையில் வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்
- அமைதி, சகோதரத்துவம், சமத்துவம், பகிர்தல் போன்றவற்றை வலுவூட்டும் நிகழ்வுகள்.

**அருப்பணி றொபின்சன் ஜோசப்**
**யாழ். மறைமாவட்டப் பிரதிநிதி**
**தேசிய யூபிலி ஆண்டு செயற்பாட்டுக்குழு**

### ஜுபிலி ஆண்டு வேண்டுதல் - 2025

விண்ணகத்தில் இருக்கிற தந்தையே! / உம் திருமகனும் எங்கள் சகோதரனுமாகிய இயேசுக் கிறிஸ்துவில் / நீர் உவந்தளித்த நம்பிக்கையும் / தூய ஆவியார் எம் இதயங்களில் / தூண்டியுள்ள அன்பின் சுவாலையும் / உமது அரசின் வருகைக் கான புனித எதிர்நோக்கை / எம்மில் மீண்டெழச் செய்வதாக.

தீமையின் சக்திகள் வெல்லப்பட்டு, / உமது மாட்சி என்றென்றைக்கும் வெளிப்படுத்துகின்ற / புதிய விண்ணகமும் புதிய மண்ணகமும் பற்றிய / உறுதியான எதிர்பார்ப்பை / மானிடமும் படைப்பு அனைத்தும் பெறச் செய்தருளும். / நற்செய்தி விதைகளை / ஆர்வமுடன் வளர்ப்பவர்களாக / எம்மை உருமாற்றுகின்ற / உமது அருளை எம்மில் பொழிவீராக.

ஜுபிலியின் அருள், / விண்ணகச் செல்வங் களுக்கான நாட்டத்தை / ***நம்பிக்கையின் திருப் பயணிகளான*** எம்மிடம் /மீளத் தூண்டுவதாக./ அதனால் எங்கள் மீட்பரின் / மகிழ்வும் அமைதியும் / அனைத்துலகின் மீதும் / பொழியப்படுவதாக. / புகழும் மாட்சியும் / என்றென்றும் எக்காலத்துக்கும் / இறைவனாகிய உமக்கே / உரித்தாகுக. ஆமென்.

### ஜுபிலி ஆண்டு பாடல் - 2025

என் நம்பிக்கை சுடராய் எரிகின்றது
என் பாடல் உம்மிடமே வருகின்றது
முடிவில்லாத வாழ்வின் ஊற்றே
நான் உம்மை நம்புகிறேன் -2

i

ஒவ்வொரு தேசமும் மொழியும் குலமும்
ஒளியை காணட்டும் உம் வார்த்தையில் } 2
சிதறிய,நொறுங்கிய உந்தன் பிள்ளைகள்
வாழ்வை காணட்டும் உம் மகனில் -2 } 2

ii

பொறுமையும் கனிவும் கொண்டவரே எம்
நம்பிக்கை விடியலும் நீரல்லவோ! } 2
விண்ணகமும் மண்ணகமும் புதுப்படைப்பாகிட
எம்மை உயிர் ஆவியார் விடுவிப்பாரே-2 } 2

iii

கண்களை ஏறெடு; தென்றல் வீசுது;
கடவுளே காலத்துள் பிறந்துள்ளார். } 2
கடவுளை வழியாய்க் கொண்டிருப்போர்க்கும்
உனக்கும் எனக்கும் மனுவானார் -2 } 2



# செபமாலையின் வீரர்கள்

## 07 ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறும் அதன் வீரர்களும்

**Champions of the Rosary - The History and Heroes of a Spritual Weapon**
**by Donald H. Calloway MIC (Marian Fathers of the Immaculate Conception)**
**(–தமிழில் – அருட்பணி.எஸ்.வி.பி. மங்களராஜா) டொனால்ட் எச். கலோவே**
MIC (Marian Fathers of the Immaculate Conception)
அமல உற்பவ மரியாளின் குருக்கள் துறவறசபை

**'செபமாலை' எனும் பெயர்**
(தொடர்ச்சி)

ஒரு ஆயுதமும் ஒரு றோஜா மலரும் - சாமிநாதர் சபையின் செபமாலை எப்போதும் அவ்வாறுதானிருந்தது. இந்தச்செபம் அனைத்துலகிலும் செபமாலையென வழக்கில் வரப் பல நூற்றாண்டுகள் சென்றாலும் இறைகைவினைஞரின் நோக்கம் துவக்கத்திலிருந்தே அவ்வாறுதானிருந்தது. புனித சாமிநாதரின் வாழ்நாளிலேயே றோஜா மலரும் ஆயுதமும் ஒன்றாக இணைக்கப்பட்டு அதனால் ஒரு முக்கிய மோதலில் செபமாலைக்கு வெற்றியும் கிடைத்தது. இங்கே செபமாலை ஒரு சக்தி மிக்க ஆன்மீக ஆயுதம் என்பது நிரூபணமாகி அது விண்ணக அரசி மரியாளுக்கு ஏற்ற ஒரு றோஜா மலர்க்கிரீடமாகவும் மாறியது.

**முயுறே நகரப்போர்**
(The Battle of Muret)

1213 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ம் திகதி செபமாலையின் பெயரில் முயுறே நகரில் ஒரு போரில் வெற்றிவாகை சூடப்பட்டது. முயுறே என்பது பிரான்சின் தென்பகுதியில் உள்ள டுலூஸ் (Toulouse) மாநகருக் கருகில் உள்ள ஒரு சிறிய நகரம். முயுறே எனும் இந்நகரம் அபிஜென்சியன் பேதகர்களுடைய கோட்டையாகவிருந்ததுடன் இப்பேதகர்கள் இங்கிருந்து தமது இருப்பை விரிவுபடுத்தி பிரான்ஸ் தேசம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத்திட்டமிட்டிருந்தனர். அப்போது பாப்பரசராயிருந்த 3 ம் சாந்தப்பர் (Pope Innocent III) (1198-1216) இப்பேதகர்களது விரிவாக்கத்திட்டம் மட்டில்அச்சம் கலந்த கரிசனை கொண்டவராக ஒரு சிலுவைப் போர்ப்படையணியொன்றை ஏற்பாடு செய்து இப்பேதகர்களைபிரான்சிலிருந்து ஒட்டுமொத்தமாக நிர்மூலமாக்க எண்ணினார். பாப்பரசருடைய ஆசீர்வாதத்துடன் கோமகன் சீமோன் டி மொன்போர்ட் (Count Simon de Montfort) ஒரு படையணியை ஒன்று சேர்த்தார். ஆயினும் எதிர்பார்த்தளவு ஆளணி வந்து சேரவில்லை: 1500 பேரைத்தான் இவரால் சேர்க்கக்கூடியதாகவிருந்தது. இவர் வட பிரான்சில் இருந்து எதிர்பார்த்த வீரர்கள் வந்து சேரவேயில்லை. மறுபக்கத்தில் அல்பிஜென்சியன்களது படையணியில் 30,000 பேருக்கு மேலிருந்தனர். இவர்களை வழிநடத்த டுலூஸ் நகர றேமண்டும், அரகன் மாகாண ஆட்சியாளர் 2வது பேட்றோ ஆகியோர் இருந்தனர். போர் வெறி கொண்ட இக்குழுவினரது குறிக்கோள் ஒன்றேயொன்றுதான். அதுதான் சிறியளவிலான கத்தோலிக்க படையணியை இல்லாதொழிப்பது. எண்ணிக்கையில் மிகவும் அதிகமான படையணியைக் கொண்ட அல்பிஜென்சியப் படையணியினர் தமது பெரும் எண்ணிக்கையில் நம்பிக்கை கொண்டு கத்தோலிக்க படையணியை முற்றாக நசுக்கி விடலாமென எண்ணினர்.

தம்மை யாருமே வெல்லமுடியாது என எண்ணிய அல்பிஜென்சியப் படையினர் போர் இடம்பெறுவதற்கு முதல் நாளிரவு குடித்துவெறித்தலிலும், ஒழுக்கக்கேடானசெயல்களிலும் ஈடுபட்டனர் - இத்தவறே அவர்களது பெருவீழ்ச்சிக்குக் காரணமாயமைந்தது.

இதற்கெதிர்மாறாக கோமகன் சீமோன் டி மொன்போர்ட், புனித சாமிநாதர் ஆகியோரின் கூட்டு வழிநடத்தலில் தம்மைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த கத்தோலிக்கப்படையணி முழுவதும் அந்த இரவு முழுவதும் செபமாலை சொல்லி செபிப்பதில் ஈடுபட்டிருந்தது.

மறுநாள் அதிகாலையில் கத்தோலிக்கப் படையணியினர் பலர் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று எல்லோரும் திருப்பலியிலும் பங்குபற்றினர். புனித சாமிநாதர் முயுறே நகரிலுள்ள புனித யாகப்பர் ஆலயத்திற்குச்சென்று போரில் வெற்றி கிடைக்க இறைவேண்டலில் ஈடுபட்டார். அவர் ஆலயத்தில் செபமாலை சொல்லி செபித்துக் கொண்டிருந்தவேளையில் சீமோன் டி மொன்போர்ட்டும் அவருடைய படையினரும் முதல்நாளிரவு முழுவதும் குடித்து வெறித்து இன்னும் அவ்வெறியிலிருந்து விடுபடாது, படையினருக்கு வேண்டிய கட்டுக்கோப்பெல்லாம் குழம்பிய நிலையில் ஒழுங்கின்றித் தடுமாறிய அல்பிஜென்சியப்படையணி மீது முழுப்பலத்துடன் பாய்ந்து அவர்களை முழுமையாகத்தோற்கடித்தனர். இப்படியானதொரு தாக்குதலைத் தாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை அல்பிஜென்சியர்கள் எதிர்பார்க்கவேயில்லை. வரலாற்றாய்வாளார்களும், வரலாற்று நிகழ்வுகளைப் பதிவோரும் இந்நிகழ்வுகளைப் பதிவுசெய்யும்போது ஒரு காட்டில் தேவையற்ற மரங்களை ஒரு தொழிலாளர் படையணி கோடரியால் அரிந்து சாய்ப்பதுபோல இந்த அல்பிஜென்சியப் படையணியும் நிர்மூலமாக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். இவ்வாறாகக் கத்தோலிக்கப்படையணி அமோக வெற்றிவாகை சூடியதுடன், பாரிய நிலப்பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டவருவதை நோக்கமாகக்கொண்டிருந்த அல்பிஜென்சிய பேதகம் முடிவுக்கு வந்தது. இப்பேதகக்குழு தொடர்ந்து ஆங்காங்கே இருந்துகொண்டிருந்தாலும் சாமிநாதர் சபையினர் இதற்கெதிராகத் தமது போதனைப்பயணத்தைத் தொடர்ந்து கொண்டேயிருந்தனர். ஆயினும் இம்முயுறே போருக்கு பின்னர் இப்பேதகக்குழுவினால் மீண்டெழ முடியவில்லை.

இந்தப் போருக்குப்பின் இப்பகுதியில் வாழ்ந்த ஒவ்வொரு கத்தோலிக்கரும் இதில் கிடைத்த வெற்றி செபமாலைக்குக்கிடைத்த வெற்றியென்பதை ஏற்றுக்கொண்டனர். இவ்விடத்தில் வாழ்ந்துவந்த மக்களும் சீமோன் டி மொன்போர்ட்டும் புனித சாமிநாதர் அந்நேரத்தில் செபமாலை சொல்லி செபித்த முயுறே நகரத்திலுள்ள புனித யாகப்பர் ஆலயத்தில் திருச்செபமாலைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிற்றாலயத்தைக் கட்டிமுடிக்குமளவுக்கு ஆர்வத்துடன் செயற்பட்டனர் - இதுதான் திருஅவை வரலாற்றில் திருச்செபமாலைக்கு அர்ப்பணிக்கப்பட்ட முதல் ஆலயமாகும். புனித கன்னிமரியாள் புனித சாமிநாதருக்கு செபமாலையைக் கையளிக்கும் ஒரு ஓவியம் இச்சிற்றாலயத்தில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தில் புனித சாமிநாதர் மரியாளுக்கு ஒரு பக்கமாக நின்றுகொண்டு கையில் ஒரு செபமாலையை ஏந்திய வண்ணமும் மறுகையால் மரியாளிடமிருந்து செபமாலையைப் பெற்றுக்கொள்வதாகவும் வரையப்பட்டுள்ளது.

கன்னிமரியாளுக்கு மறுபக்கத்தில் சீமோன் டி மொன்போர்ட்டும், டுலூஸ் நகர ஆயர் புல்க் ஆகியோரும் முழந்தாட்படியிட்டிருப்பதையும் காணலாம். துரதிஷ்டவசமாக இந்த ஓவியம் 18ம் நூற்றாண்டின் இறுதிக்கால்நூற்றாண்டில் (1789ன் பின்) அழிவடைந்தது. எனினும் இப்படியான ஒரு ஓவியம் இவ்வாலயத்தில் இருந்ததற்கான எழுத்துபூர்வ ஆதாரம் உள்ளது.

இந்த ஓவியத்திற்கு மேலதிகமாக முயுறேப் போரில் செபமாலையின் முக்கிய பங்குபற்றிப்பல சமகாலசாட்சியங்களும் உள்ளன. இப்போர் இடம்பெற்று ஒரு வருடம் முடிவதற்குமுன் 1214ம் ஆண்டின் துவக்கத்தில் தென்பிரான்சின் ஒரு சிறிய மாகாணமாகிய லாங்குவேடொக் (Languedoc) என்னுமிடத்திலிருந்த ஒரு வழக்கறிஞர் ஒரு கவிதையொன்று எழுதியிருந்தார். அதில் எவ்வாறு புனித சாமிநாதர் இப்போரின் போது திரும்பத் திரும்ப றோஜா மலர்களைக் கொண்டுவந்து வழங்கியதாகவும், அவற்றைக்கொண்டு ஒரு மலர்வளையம் செய்ததாகவும் குறிப்பிடுகின்றார். இது உண்மையில் கவிதை நடையில் புனித சாமிநாதர் திரும்பத்திரும்ப 'அருள்மிகப்பெற்ற மரியே வாழ்க..' எனும் செபத்தைச் சொல்லி வேண்டியதையே குறிக்கின்றது.

(தொடரும்....)




**ஆயர் கிறிஸ்ரோப்பர் பொன்ஜீன், அ.ம.தி.**
**யாழ். திருத்தூது மாவட்ட முதல்வர், 1868 - 1883**
**கொழும்பு திருத்தூது மாவட்ட முதல்வர், 1883 - 1887**
**கொழும்பு அதியுயர் மறைமாவட்டப் பேராயர், 1887 - 1892**

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

**யாழ் திருத்தூது மாவட்டம்**
(தொடர்ச்சி)

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அருட்பணியாளர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவரே அம் மாவட்டத்திலுள்ள மறைத்தளங்கள் எல்லாவற்றிற்கும் பொறுப்பாளருக்குரிய (Dean) அதிகாரத்துடனும், பொறுப்புக்களுடனும் செயற்படுவார். இந்த மறைப்பணியாளர்கள் அவரவர் மாவட்டங்களில் உள்ள மறைத்தளங்களை ஒவ்வொரு வருடமும் சென்று தரிசிக்க வேண்டும். இம் மறைத்தளத்தரிசிப்புக்கள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டுமென்ற தெளிவான வழிகாட்டுதல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இம்மறைத்தளத்தரிசிப்புக்கள் ஒவ்வொன்றும் சிறியளவிலான மகாஞானொடுக்கங்களாக இருக்க வேண்டுமென்றும் ஆயர் அவர்கள் வழிகாட்டுதல்களை வழங்கினார். மறைப்பணியாளர்கள் தத்தமது வதிவிட மறைத்தளங்களில் (பங்குகளில்) இருந்த வண்ணம் திருப்பலி, அருளடையாளங்கள், அடக்கச் சடங்குகள் போன்ற சாதாரண பங்குப்பணிகளுடன் திருப்தியடையாது சிறு சிறு குழுக்களாகப் பல்வேறு மறைத்தளங்களுக்குச் சென்று சந்தித்து பங்கு மகாஞானொடுக்கங்களை அவ்வப்போது ஏற்பாடு செய்ய வேண்டுமென வழிகாட்டுதல்களை வழங்கி வந்தார். இவ்வாறாக 1868 ற்கும் 1878 க்கும் இடைப்பட்ட 10 வருட காலப் பகுதியில் யாழ் திருத்தூது மாவட்டத்தில் இவ்வாறான 9 மகாஞானொடுக்கங்கள் நடாத்தப்பட்டன. இம்மகாஞானொடுக்கங்கள் யாழ்ப்பாணம், மன்னார், பேசாலையில் இவ்விரண்டு தடவையும், வலிகாமம், மட்டக்களப்பு, கல்பிட்டி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் இடம்பெற்றன. ஆயரின் பங்குகளுக்கான தரிசிப்புக்களும் சிறு சிறு பங்கு மகாஞானொடுக்கங்களாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஆயர் பொன்ஜீனின் குறுகிய ஐரோப்பிய விஜயம்**

ஆயர் பொன்ஜீன் யாழ் திருத்தூது மாவட்டத் திருத்தூது முதல்வராகப் பொறுப்பேற்று இரண்டு வருடங்களாவதற்கு முன்னரே ஐரோப்பா செல்ல வேண்டியிருந்தது. 1869 ம் ஆண்டு வத்திக்கானில் பாப்பரசர் 9ம் பத்திநாதரினால் 1ம் வத்திக்கான் சங்கம் (திருஅவையின் 20ம் பொதுச்சங்கம்) கூட்டப்பட்ட போது அதில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தார். இவர் 1869 ம் ஆண்டு நவம்பர் 9ம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றார். இச்சங்கம் மிகக்குறுகிய காலமே இடம் பெற்றது. (டிசம்பர் 8 ம் திகதி 1869 ம் ஆண்டிலிருந்து செப்டெம்பர் 1 ம் திகதி 1870 ம் ஆண்டு வரை) இத்தாலிய அரசன் 2ம் விக்டர் இம்மானுவேல் பாப்பரசரின் வதிவிடம் அமைந்துள்ள ரோமாபுரியைக் கைப்பற்றியதுடன் 1ம் வத்திக்கான் சங்கம் பாப்பரசரால் காலவறையின்றிப் பின்போடப்பட்டது. (பின்னர் இச்சங்கம் உத்தியோகபூர்வமாக முடிக்கப்படவோ மீண்டும் ஆரம்பிக்கப்படவோ இல்லை) ஆயர் பொன்ஜீன் மீண்டும் இலங்கைக்கு வருமுன் பிரான்சின் பரிசில் இருந்த தமது தாயாரையும் சகோதரியையும் ஒரு குறுகிய சந்திப்புக்காகச் சென்றபின் திரும்பவும் இலங்கை வந்து 1871 ம் ஆண்டு ஜனவரி 2 ம் திகதி யாழ்ப்பாணம் வந்தடைந்தார். அருட்பணியாளரின் பற்றாக்குறை ஒரு மறைமாவட்டத்தில் அல்லது திருத்தூது மாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்களது எண்ணிக்கை அவர்கள் அங்கு ஆற்றும் மறைப்பணிக்குப் போதுமானதாக இருக்க வேண்டுமென்பது ஆயர் பொன்ஜீனுடைய எண்ணமாகும்.அருட்பணியாளர்களது எண்ணிக்கை மிகவும் குறைவாகவிருந்ததால் மறைப்பணியில் ஒரு முன்னேற்றமும் தென்படாதுமாறாக அறியாமை, மூடநம்பிக்கைகள் மற்றும் பல்வேறு தீச்செயல்கள் தாம் தலைவிரித்தாடும். இதனால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பிழையான பாதையில் செல்வார்கள்.

(தொடரும்...)

# “கனவு காண்போம்”




கரைவையூர்ச் செல்வம்

### இன்றைய தேவைகள்

ஒருவர் ஒருவரோடு உரையாட, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளப் பல்வேறுபட்ட பிரிவினை-களை ஒன்றிணைக்க ஓர் அவசியம் இன்று தோன்றியுள்ளது. பொதுநிலையினர், குருக்கள், ஆண்கள் - பெண்கள் மறைமாவட்டக் குருக்கள், துறவிகள், ஆயர்கள், குருக்கள் என்ற பிரிவினைகள் மதங்களிடையே, இனங்களிடையே, நாடுகளிடையே, மொழிகளிடையே, கட்சிகளிடையே பிரிவினைகள் வளர்ந்து வருவதைப் பார்க்கின்றோம்.

நாம் ஒரு மத நிறுவனத்தின் பிரிவுபட்ட அங்கத்தவர்களா?அன்றேல் கிறிஸ்துவின் சீடர்களா? என்ற பெரிய சவாலுக்கு எம்மைத் திறந்துவிடும் நேரமிது. கத்தோலிக்க திருஅவை என்று கூறி, ஓர் உலகளாவிய அரசு சார்பற்ற நிறுவனத்தில் நாங்கள் அங்கத்தவர்களா? அன்றேல் இயேசுவின் அழைப்பை ஏற்று, அவரின் நண்பர்களாகி (ஆன்மீக வாழ்வு), கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வோராக வாழ்வோமா? கூட்டொருங்கிய தூர நோக்கின் மறுபக்கக் கேள்விகள் இவை. ஆன்மீகப் பயணம், மீட்புப் பயணம் நெடியது. வளைவுகள் கொண்டவை. அதனால் பொறுமை வேண்டியது. கட்டுப்பாடான வாழ்வு (disciplined Life) தேவையானது என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

### கட்டுப்பாடான வாழ்வு

ஆன்மீகப் பயணத்தில், இந்த நெடிய வாழ்க்கைப் பயணத்தில் கட்டுப்பாடு அவசியம் தான். அடிக்கடி பயன்படுத்தும் ஓர் உதாரணம்: இன்று பெரும்பான்மை மக்கள் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் பார்வையாளர்களாகப் பங்கு பற்றுகின்றார்கள். முதல்தர கிரிக்கெட் போட்டிகளைப் பார்ப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். பார்வையாளரில் பலர் விசிறிகளாக மாறி, பின்னர் விசரர்களாக மாறுவதும் உண்டு.

இந்த முதல்தர போட்டிகளில் பங்கு பற்றும் வீரர்களின் வாழ்க்கையை இட்டுச் சிந்தித்தோமா? இவர்களுடைய உணவு முறைகள், நெடிய நேர உடற்பயிற்சிகள், விளையாட்டுப் பயிற்சிகள் என்று நிறையவே உண்டு. விளையாட்டு வீரர்களுக்கு என ஓர் உளவியல் உண்டு. (sports Psychology உங்களில் சிலர் இதைப் பார்த்து வியக்கலாம். ஆனால், உண்மை இந்த விளையாட்டு வீரர்களின் மனப்போக்கு (attitude), குவிமையப்படுத்தல் (focus), ஒருமுகப்படல் (Concentration) பராக்குகளின் மத்தியிலும் ஒரு முகப்படல், தோல்வியிலும் சோர்வடையாமை, அடுத்த வெற்றி இலக்கை நோக்கி நகர்தல்.நடைபெற்ற போட்டியைத் திறந்த மனதுடன் ஆய்வு செய்தல் போன்றவற்றிற்கு இந்த விளையாட்டு உளவியலாளர் பெரிதும் உதவுகின்றார்கள்.

இவ்வளவையும் இவ் விடத்தே எழுதுவதற்கு என்ன காரணம்? சாதாரண விளையாட்டுப் போட்டிக்கு இவ்வளவு கட்டுப்பாட்டு வாழ்க்கை, ஒழுங்கு முறைகள், உடற்பயிற்சியும் உளப் பயிற்சியும் ஒழுக்கப் பயிற்சியுமென்றால் ஓர் ஆன்மீக வாழ்விற்கு எவ்வளவு கட்டுப்பாடு, உடல் - உளப் பயிற்சி, ஒழுக்கமான வாழ்வு தேவையென்பதை இவ்விடத்தே வெகுவாக வலியுறுத்த விரும்புகின்றேன். இதனால்தான் என்னவோ ஆன்மீக வாழ்வில் நாம் அக்கறை கொள்வதில்லை. இதைத்தான் இயேசுவும் குறுகிய வாசலால் வருவோர் மிகச் சிலர் என்று கூறினார்.

### பன்மையில் ஒற்றுமை

மேற்கூறிய ஆன்மீக வளர்ச்சியில் ஈடுபடுவோர் தான் பன்மையில் ஒற்றுமை காண்பார்கள். மனித வாழ்வின் முதிர்ச்சியில்தான் பன்மையில் ஒன்றுபடுத்தலாம். முரணாக, ஒருருப் படுத்தலில் ஒன்றுமை இல்லை. ஒரு வகை அடிமைத்தனம் இருக்கலாம். பன்மையில் ஒற்றுமை காண வார்த்தைகள் போதாது. அறிவு வளர்ச்சி மட்டும் காணாது: ஆனால், மனப்பக்குவமும், மனித முதிர்ச்சியும் தேவை. அப்பொழுதுதான் அகத்தே ஒரு பரப்பகலத்தை (inner space) உருவாக்க முடியும். அது, அவசியமும் கூட. இந்தப் பரப்பகலத்தினுள் எவ்வித அச்சுறுத்தலுமின்றி மற்றவர்களை நான் வரவேற்பேன். அவர்களுடைய வருகை எனது வாழ்வில் ஒரு பாதுகாப்பின்மையை உருவாக்காது. இந்நிலையில்தான் இயேசு சொல்லிய எனது எதிரியையும் நான் ஏற்றுக்கொள்ளும் பக்குவமடைவேன். எனக்கென்று எதிரிகள் யாருமே இல்லையென்ற உணர்வு என்னில் உறுதியாகும்.

### பாதுகாப்பற்ற உணர்வு

எனக்கென்று ஒரு திடமான வலிமையான உளவள அடையாளம் தேவை. இல்லையெனில், என்னுள் ஒரு பாதுகாப்பற்ற உணர்வு எழும். இந்த உணர்வு ஒரு பதட்ட நிலைமையை உருவாக்கும். இந்த நிலையில், மற்றவர்களை எனது வாழ்விற் கொண்டு வர நான் பயப்படுவேன். இந்தப் பதட்டமும் பயமும் தான் மற்றவர்களை எனது எதிரியாகப் பார்க்க வைக்கின்றது.

இது, கணவன் - மனைவியிடையேயும் ஏற்படலாம், சகோதரர்களிடையேயும் ஏற்படலாம், மதங்களிடையே, சாதிகளிடையே, இனங்களிடையே, நாடுகளி டையேயும் ஏற்படலாம், ஏற்படுகின்றன. குடும்பங்களைப் பாருங்கள், இனங்களைப் 'பாருங்கள், மதங்களைப் பாருங்கள், நாடுகளைப் பாருங்கள். இந்த உண்மை வெள்ளிடைமலையாகத் தோன்றும். ஏன் எங்கள் நாட்டைப் பாருங்கள், எங்கள் இனங்களைப் பாருங்கள், எங்கள் சாதிகளைப் பாருங்கள், எங்கள் பிராந்தியங்களைப் பாருங்கள் உண்மை விளங்கும்.

இந்தப் பாதுகாப்பின்மையில் அகத்தேயும் ஒரு பிளவு ஏற்படும். இந்தப் பிளவு தான் அனைத்து வன்செயல்களுக்கும் மூல காரணம். இந்த வன்செயல்தான் போராக வெடிக்கின்றது.

### 'என் அன்பில் நிலைத்திருங்கள்'

என்னை உணர்ந்து (தன்னுணர்வு), என்னை அறிந்து (தன்னறிவு), புரிந்து, என்னையே நான் ஏற்றுக்கொண்டு, அகத்தேயும் புறத்தேயும் நான் பயணிப்பேனானால், நான் என்னில் ஊன்றியவனாவேன். இந்தப் படிமுறை தொடர் வளர்ச்சியாகவே அமையும். அமைய வேண்டும். இந்த எனது ஊன்றல், என்னுள் வாழும்தெய்வீகத்தில் ஊன்ற வழி சமைக்கும். 'எனது அன்பில் நிலைத்திருங்கள்' என்ற இயேசுவின் அழைப்பு எனக்கு ஓர் அனுபவமாக மாறும். இந்த நிலையில் நான் அனைவரையும் உள்வாங்குவேன்.

### அச்சுறுத்தல்

இன்னொருவரின் கருத்தோ, செயற்பாடோ, ஆளுமையோ எனக்கு ஓர் அச்சுறுத்தலாக அமையாது. முரணாக என்னுடைய ஊன்றல் பலவீனமானால், என்னுடைய அடையாளம் புறத்தில் தங்கியிருந்தால், மாற்றான் கருத்தை ஏற்கவோ, மாற்றான் ஆளுமையை ஏற்கவோ முடியாதவர்களாக மாறுகின்றோம். அதனாலேயே மாற்றானை மாற்றானை அழிக்க முற்படுகின்றேன். சர்வாதிகாரிகளைப் பாருங்கள் சர்வாதிகாரப் போக்குடையோரைப் பாருங்கள். ஏன், கணவன் - மனைவியரைப் பாருங்கள். ஆசிரியர் - மாணவர்களைப் பாருங்கள். யார் யாருக்கு எப்பொழுது பயப்படுகிறார்கள்? யார் யாரை அடக்கியாள முனைகிறார்கள்? யார் யாருக்கு எதிரிகளாக மாறுகிறார்கள்? எப்பொழுது?

உங்கள் வாழ்க்கையைப் பாருங்கள். உங்கள் எதிரிகள் யார், ஏன் இவர்கள் எதிரிகளாக மாறினார்கள்? நீங்கள் யாருக்காவது எதிரியாக மாறினீர்களா? ஏன்? கம்பரசம் எழுதிய சி.என்.அண்ணாத்துரை வேறு. மீண்டும் அவ்வகையான நூலை எழுதமாட்டேன் என்று சொல்லிய அண்ணாத்துரை வேறு. இதனிடையே அவர் பெற்ற வளர்ச்சியை அவதானிக்க முடியாமல் இருக்க முடியாது. இந்த வளர்ச்சியில்தான், தமிழ்நாட்டு முதலமைச்சர் அண்ணாத்துரை எழுதினார்; “மாற்றான் வீட்டு மல்லிகைக்கும் மணமுண்டு” ஆனால் இந்த இருபத் தோராம் நூற்றாண்டில், மாற்றான் வீட்டு மல்லிகைக்கு மணமில்லை என்று சொல்வோரும், மாற்றான் வீட்டில் மல்லிகையே இருக்கக்கூடாதென்று சொல்லும் வேறு சிலரும், மாற்றான் வீட்டில் தோட்டமே இருக்கக் கூடாதென்று சொல்லும் அடிப்படைவாதிகளும் இருப்பது நாகரிகத்தின், பண்பாட்டின் வளர்ச்சியல்ல, வீழ்ச்சியே.

நான் மேற்கூறிய மூன்று வகையினடையே பாரிய வேறுபாடுகள் இல்லை. மூன்று வகையினரும் காமராஜர் கூறியது போல மூன்றும் “ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்” இந்த மட்டைகள் எவ்வளவு ஆழமாக ஊறியன என்பதில் தான் வேறுபாடு.

### எதிரிகள்

மேற்கூறிய மூன்று வகையினரும் தான் ஒருருப்படுத்தலை விரும்புகிறார்கள். தங்கள் கட்டுப்பாட்டுக்குள் மக்களை அடக்கி வைக்க விரும்புகிறார்கள். அதுவே, தங்களுக்குப் பாதுகாப்பையும், பதவியையும், அதிகாரத்தையும் தருமென எண்ணுகிறார்கள். பன்மையில் ஒற்றுமைகாண இவர்களால் இயலாது. ஆகவே, பன்மைத் தன்மையை இவர்கள் வெறுப்பார்கள். எல்லோரையும் உள்வாங்க மறுப்பார்கள். போப் பிரான்சிஸ் அவர்களுடைய சீர்திருத்தங்களையும் கனவையும் எதிர்க்கிறார்கள். இவர்களை இனங்கண்டு கொண்டோம். இவர்களும் உரோமை மாநாட்டிற்கு வருவார்கள். குழப்புவார்கள். போப் பிரான்சிஸ் அவர்களுடைய சீர்திருத்தங்களுக்கும் அவருடைய பாரிய கனவிற்கும் முட்டுக்கட்டை போடுவது மட்டுமல்ல, இந்தச் சீர்திருத்தங்கள் தொடராமல் இருக்க அடுத்த கத்தோலிக்க திருஅவையின் பெருந்தலைவர் தங்களுள் ஒருவராக, கத்தோலிக்க திருஅவை இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னிருந்த நிலைக்குப் பின்னடைவு கொள்ள பின்னிழுக்கும் ஒருவரை நியமிக்க இப்பொழுது ஆட்சேர்க்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.

### சளைத்தவர் அல்ல

இதற்குப் போப் பிரான்சிஸ் சளைத்தவரல்ல. தனது சீர்திருத்தப் பணி தொடர, தனது கனவு நனவாகும் பாதையில் திருஅவை பயணிக்க, தனது சிந்தனையை ஏற்றுக்கொண்டவர்களை முக்கிய துறைகளில் ஏற்கனவே நியமித்து விட்டார். இந்த அர்த்தமுள்ள சீர்திருத்தங்களைத் தொடர அடுத்த போப் ஒருவரைத் தெரிவு செய்யத் தனது சீர்திருத்தங்களையும் கனவையும் ஏற்றுக் கொண்டோரைக் கருதினால்களாகத் தெரிவு செய்து விட்டார். மேலும் பலரை அடுத்தமாதம் நியமிப்பார். ஒட்டுமொத்தமாக, அடுத்த போப் அவர்களைத் தெரிவு செய்வோரில் கிட்டத்தட்ட 70 வீத விழுக்காடு போப் பிரான்சிஸ் அவர்களின் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டோராகவே இருப்பார்கள். தனது தலைமைத்துவச் சிறப்பை இங்கும் போப் பிரான்சிஸ் தெளிவாகக் காட்டியுள்ளார்.

### ஒன்றாகப் பயணிப்போம்

எங்கள் வேற்றுமைகளைக் களைந்து, முரண்பாடுகளைத் தீர்த்து, எதிர்பார்ப்புகளை அகற்றி, மனிதம் என்ற ஒன்றில் அனைவரும் பயணிப்போம்: அனைவரையும் உள்வாங்கிப் பயணிப்போம். இது காலத்தின் அவசியத் தேவை. நெற்றிக் கண்ணில் (mind's eye or the inner eye) அல்லது எங்கள் அகக் கண்ணில் தூரத்தே தெரியும் முழுமையை - உடைபடாத முழுமையை (the unbroken wholeness) கடவுள் முழுமையானவர் ( God is whole jp. 5:48) என்ற உய்த்துணர்வில் பயணிப்போம். நெடிய, வளைவுகள் கொண்ட, மேடும் பள்ளமுமான ஆங்காங்கே முள்ளும், கல்லுமான பாதையில் நம்பிக்கையோடு, ஒருவர் ஒருவருக்குக் கை கொடுத்து உடன் பயணிகளாகப் பயணிப்போம். செக்கோசுலோவாக்கிய முன்னை நாள் கத்தோலிக்க மதத்தைத் தழுவிய சனாதிபதி வக்லேவ் காவெல் சொன்னார் : “நம்பிக்கை என்பது நல்லதொன்று நடக்குமென்ற எதிர்வுகூறலில் அல்ல, ஆனால் என்னவானாலும் அதில் ஓர் அர்த்தம் தோன்றும்.

### தேர்தல்

அண்மைக் காலமாகத் திருஅவையில் ஏற்பட்ட சில பாரதூரமான பிரச்சினைகள், உ-ம்: குருக்கள், ஆயர்கள், கருதினால் மார்களிடையே நடைபெற்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் இவற்றில் ஈடுபட்டோரைப் பாதுகாத்த முயற்சிகள் திருஅவையில் ஒரு அவநம்பகத்தன்மையை ஏற்படுத்தி விட்டது. ஆகவே, அடுத்த திருத்தந்தை இப்படிப்பட்ட பிரச்சினைகளில் ஈடுபாடு கொள்ளாதவராக இருக்க வேண்டுமென்பது ஒரு பெரிய கரிசனை.

போர்புரியும் நாடுகளிடையே சமாதானத் தூதுவராக, சூழலைப்பற்றிப் பேசியும், எழுதியும் வரும் ஒரு தலைவராக, பாலியல் பற்றிய இன்றைய பல்வேறு பிரச்சினைகளுக்குத் துணிவாக முகம் கொடுப்பவராக, அகதிகளை அரவணைக்க ஐரோப்பிய நாடுகள் முன்வர வெண்டுமென்பது அவர்களுக்காக ஓங்கிக் குரல் கொடுப்பவராக, அனைவரையும் உள்வாங்க வேண்டுமென்று திடமாக இருக்கும் ஒருவராகப் போப் பிரான்சிஸ் ஓர் உலகத் தலைவராகினார். இதனால் ஐரோப்பிய நாட்டு அரசியல்வாதிகள் சிலரின் வெறுப்பையும் தனதாக்கிக் கொண்டார். இப்படிப்பட்ட சூழலில் அடுத்த திருத்தந்தையின் தெரிவில் சில ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு உருவாகுமா என்றவொரு நியாயமான பயம் கலந்த கரிசனை வத்திக்கான் வட்டாரங்களில் உண்டு. ஆகவே, ஒரு திருத்தந்தையைத் தெரிவு செய்யும் முறையில் சில மாற்றங்கள் தேவை என்ற ஒரு சிந்தனை உருவாகியுள்ளது. உய்த்துணர்வில் கவனம் எடுக்கும் போப் பிரான்சிஸ், அடுத்த திருத்தந்தையின் தெரிவில் அதை அமுல்படுத்த முனைவார்.

# உலகை ஆயர்கள் மாமன்ற ஆரம்ப நாள் திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை



**அன்பார்ந்தவர்களே,**

நாம் இப்பொழுது கேட்ட நற்செய்திப் பகுதியின் முற்பகுதியானது இயேசுவின் பணியிலிருந்த ஒரு கடினமான தருணத்தைப் பற்றி விவரிக்கின்றது. இதை நாம் மேய்ப்புப்பணியின் விரக்திநிலை என அழைக்கலாம். திருமுழுக்கு யோவான் இயேசு உண்மையில் மெசியா தானா என்று சந்தேகப்படுகிறார். ஏனெனில் இயேசு கடந்து வந்த பல நகரங்களில் இருந்த மக்கள், அற்புதங்கள் பலவற்றை அவர் நிகழ்த்தியிருந்தபோதும், மனம் மாறவில்லை. மாறாக அவரைப் போசனப்பிரியன், குடி-காரன் என்று குற்றம் சாட்டினார்கள். அதேவேளையில் திருமுழுக்கு யோவான் மிகவும் கண்டிப்பானவராக இருந்ததால் அவரைப்பற்றிப் புகார் செய்தனர். இதனால் இயேசு சோகம் மற்றும் வருத்தம் தன்னை வென்றுவிட விடவில்லை. மாறாக விண்ணகத்தைநோக்கித் தன் கண்களை உயர்த்தி இறையரசின் மறைபொருளை எளியவர்களுக்கு வெளிப்படுத்தியதற்காகத் தந்தையை புகழ்கின்றார்: தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். (மத் 11:25). விரக்தியின் தருணத்திலும் இயேசு அதனைக் கடந்து பார்க்கக் கூடிய பார்வையைக் கொண்டிருக்கிறார்: அவர் தந்தையின் ஞானத்தைப் புகழ்கின்றார், மறைவாக வளரும் நன்மை, எளியவர்களால் வரவேற்கப்படும் வார்த்தையின் விதை, இரவிலும் வழிகாட்டும் இறையரசின் ஒளி ஆகியவற்றைத் தெளிந்து தேர்ந்திடும் ஆற்றலைக் கொண்டிருந்தார்.

அன்பார்ந்த சகோதர கர்தினால்களே, சகோதர ஆயர்களே, அருட்சகோதரிகளே, அருட்சகோதரர்களே, நாம் உலக ஆயர்கள் மாமன்றத்தின் தொடக்கத்தில் இருக்கின்றோம். மனித யுத்திகள், அரசியில் கணக்கீடுகள், கருத்தியல் போராட்டங்கள் ஆகியவற்றால் ஆன முற்றிலும் இயற்கையான பார்வை இங்கு நமக்குத் தேவையில்லை. நாடாளுமன்றக் கூட்டத்தையோ சீர்திருத்தத் திட்டத்தையோ நடத்த நாம் இங்கு வரவில்லை. தந்தையை புகழ்கின்ற, சோர்ந்துபோய்க் களைப்படைந்து ஒடுக்கப்பட்டுள்ளவர்களை வரவேற்கின்ற இயேசுவின் பார்வையுடன் சேர்ந்து நடக்க நாம் இங்கே இருக்கின்றோம். எனவே ஆசீர்அளிக்கும் மற்றும் வரவேற்கும் இயேசுவின் பார்வையிலிருந்து நமது பயணத்தைத் தொடங்குவோம்.

**1.இயேசுவின்ஆசீர்அளிக்கும் பார்வை.**

நிராகரிப்பை அனுபவித்திருந்தாலும், தன்னைச் சுற்றிக் கடினமான இதயத்தினரைக் கண்டிருந்தாலும், கிறிஸ்து ஏமாற்றத்தின் சிறையில் தன்னை அடைத்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. மனம்கசப்படையவில்லை, தந்தையைப் புகழ்வதை நிறுத்தவில்லை. மாறாகத் தந்தையின் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அவரது இதயம் புயலிலும் அமைதியாக இருக்கிறது.

இந்த ஆசீர்அளிக்கும் இயேசுவின் பார்வை, மகிழ்ச்சியான இதயத்துடன் கடவுளுடைய செயலைச் சிந்தித்து நிகழ்காலத்தைப் பகுத்தறியும் ஒரு திருஅவையாக இருக்க நம்மை அழைக்கிறது. நமது காலத்தின் சில நேரங்களில் கொந்தளிப்பான அலைகளுக்கு மத்தியில், மனம் தளரவோ, கருத்தியல் குறுக்குவழிகளைத் தேடவோ, முன்கருத்துக்களுக்குப் பின்னால் தன்னை நிறுத்திக் கொள்ளவோ, வசதியான தீர்வுகளுக்கு அடிபணியவோ, ஆணையிடவோ அனுமதிக்காது. இது திருஅவையின் ஆவிக்குரிய ஞானம், இது புனித 23ஆம் யோவான் அவர்களால் சுருக்கமாக இவ்வாறு கூறப்படுகின்றது: தந்தையிடமிருந்து பெறப்பட்ட உண்மையின் தூய பரம்பரையிலிருந்து திருஅவை ஒருபோதும் விலகக்கூடாது என்பது முதலில் அவசியம். ஆனால் அதே நேரத்தில் கத்தோலிக்க திருத்தூதருக்குப் புதிய வழிகளைத் திறந்துவிட, நவீன உலகில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நிலைமைகள் மற்றும் புதிய வாழ்க்கை வடிவங்களை எப்போதும் கவனிக்க வேண்டும். (இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் புதிய தொடக்க உரை (11 அக்டோபர் 1962).இயேசுவின் ஆசீர்வதிக்கும் பார்வை இன்றைய உலகின் சவால்களையும் பிரச்சினைகளையும் பிளவுபடுத்துகின்ற சர்ச்சைக்குரிய மனப்பான்மையுடன் அல்ல மாறாக

மேய்ப்புப்பணியில் பல சவால்கள் எழுகின்றன, அவை ஒருவருக்கொருவர் பயமின்றிச் சந்திக்க ஒரு அன்பான மனப்பான்மைக்கு அழைப்பு விடுக்கின்றன. மாமன்ற உரையாடலில் இறைவனுடைய மக்களாக நாம் ஒன்றாகச் செய்யும் இந்த அழகான தூய ஆவியின் பயணத்தில் நாம் கிறிஸ்துவுடன் ஒற்றுமையுடனும் நட்புடனும் வளர முடியும். இன்றைய சவால்களை அவரது பார்வையால் பார்க்க முடியும். புனித ஆறாம் பவுலின் ஒரு சிறந்த வெளிப்பாடைப் பயன்படுத்தித் தன்னை ஒரு உரையா-டலாக மாற்றும் ஒரு திரு அவையாக மாற வேண்டும் என்கிறார். ஆம் என் நுகம் அழுத்தாது என் சுமை எளிதாயுள்ளது. (மத் 11:30) சுமைகளைத் திணிக்காமல் இருக்க அனைவருக்கும் திரும்பத் திரும்பச் சொல்கிறது: சுமைசுமந்து சோர்ந்திருப்பவர்களே, ஒடுக்கப்பட்டவர்களே வாருங்கள். உங்கள் வழியை இழந்த அல்லது தொலைதூரத்தில் உணரும்

எதிர்கொள்ளும் ஒரு திருஅவையாக இருக்க நம்மை அழைக்கின்றது. ஒன்றிப்புடன் இருக்கும் கடவுளை நோக்கி நமது கண்களைத் திருப்பி, ஆச்சிர்யம் மற்றும் பணிவுடனும் அவரை ஒரே கடவுளாக அங்கீகரித்து, வணங்குகிறது. நாம் அவருக்குச் சொந்தமானவர்கள், அவரை உலகிற்குக் கொண்டுவருவதற்காக மட்டுமே நாம் இருக்கிறோம் என்பதனை நினைவில் கொள்வோம். திருத்தூதர் பவுல் நமக்குச் சொன்னதுபோல நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன் (கலாத்தியர் 6:14). இது நமக்குப் போதுமானது. அவர் நமக்குப் போதுமான வர். இவ்வுலக பெருமையை நாம் விரும்பவில்லை. உலகத்தின் பார்வையில் நம்மை வசீகரமாக்கிக் கொள்ள நாம் விரும்பவில்லை. மா-றாக நற்செய்தியின் ஆறுதலுடன் அதை அடைய விரும்புகின்றோம். கடவுளின் எல்லையற்ற அன்பிற்கு சிறந்த முறையில் அனைவருக்கும் சாட்சியமளிக்க விரும்புகின்றோம். திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் ஒரு மாமன்றத்தில் உரையாற்றும்போது, நமக்கான கேள்வியாக வைப்பதும் இதுதான்: இறைவன் பேசினார், அவர் உண்மையிலேயே பெரிய அமைதியை உடைத்துத் தன்னை வெளிப்படுத்தி நம்மோடு உரையாற்றினார். இந்த யதார்த்தத்தை இன்றைய மக்களுக்கு எப்படித் தெரிவிக்க முடியும்? அப்போதுதான் அது மீட்பாக மாறும்? (ஆயர் மாமன்ற சாதாரண பொதுச் சபையின் முதல் பொதுச் சபை, 8 அக்டோபர் 2012). இதுதான் அடிப்படையான கேள்வி. இது மாமன்றத்தின் முதன்மையான பணியாகும்: நம் பார்வையைக் கடவுள் மீது செலுத்துவது, மனித குலத்தை இரக்கத்துடன் பார்க்கும் ஒரு திருஅவையாக இருப்பது. ஒன்றுபட்ட சகோதரத்துவம் கொண்ட, கேட்பதற்கும், உரையாடுவதற்கும் ஒரு திருஅவையாக ஆசீர்வதித்து ஊக்குவிக்கும், கிறிஸ்துவைத் தேடுபவர்களுக்கு உதவும், அலட்சியமானவர்களை அன்புடன் தூண்டும், விசுவாசத்தின் அழகில் மக்களை ஈர்ப்பதற்காகப் பாதைகளைத் திறக்கும் ஓர் அவை. கடவுளை மையமாகக் கொண்ட ஒரு திருஅவை. எனவே நமக்கிடையில் பிளவுபடாது, வெளிப்புறத்தில் ஒருபோதும் கடுமையானதாக இல்லாத திருஅவையாக கிறிஸ்துவின் மணப்பெண்ணான திருஅவையாக இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

**2. வரவேற்கும் கிறிஸ்துவின் பார்வை**

ஆசீர்வதிக்கும் பார்வையைப் பற்றிச் சிந்தித்த பிறகு, இப்போது நாம் வரவேற்கும் கிறிஸ்துவின் பார்வையைப் பற்றிச் சிந்திப்போம். தங்களை ஞானிகளாகக் கருதுகிறவர்கள் இறைவனுடைய உதவியை அங்கீகரிக்கத் தவறினாலும், இயேசு தந்தையில் மகிழ்ச்சியடைகிறார். ஏனென்றால் அவர் குழந்தைகளிடமும், எளியவர்களிடமும், ஏழைகளிடமும் ஆவியால் தன்னை வெளிப்படுத்துகிறார். இதன் விளைவாக அவர் தனது வாழ்நாள் முழுவதும் பலவீனமானவர்கள் துன்பப்படுபவர்கள் மற்றும் கைவிடப்பட்டவர்களை நோக்கி இந்த வரவேற்புப் பார்வையை எடுக்கிறார். குறிப்பாக பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று நாம் கேட்ட வார்த்தைகளை அவர் அவர்களுக்குச் சொல்கிறார். (மத் 11:28)

இயேசுவின் இந்த வரவேற்பு பார்வை நம்மை வரவேற்கும் திருஅவையாக இருக்க அழைக்கிறது. ஒரு சிக்கலான காலகட்டத்தில் புதிய கலாசாரத்தில்

நீங்கள் வாருங்கள். நம்பிக்கையின் கதவுகளை மூடியிருப்பவர்களே திருஅவை உங்களுக்காக இங்கே இருக்கிறது.

3.சகோதர சகோதரிகளே தூய இறைவனுடைய மக்களே, வரவிருக்கும் துன்பங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் இயேசுவின் ஆசீர்வாதமும் வரவேற்கும் பார்வையும் சில ஆபத்தான சோதனைகளில் விழுவதைத் தடுக்கிறது. உலகத்திற்கு எதிராகத் தன்னை ஆயுதபாணியாக்கிப் பின்னோக்கிப் பார்க்கும் ஒரு இறுக்கமான திரு அவை உலகின் நவநாகரீகங்களுக்கு அடிபணியும் ஒரு மந்தமான திருஅவை களைத்துப் போன திரு அவையாக இருந்ததால் தன்னைத் தானே மாற்றிக் கொள்ள வேண்டும்.

தாழ்மை, துடிப்பு மற்றும் மகிழ்ச்சிகொண்டு நாம் ஒன்றாக நடப்போம். ஏழ்மையையும் அமைதியையும் தந்தவரும், இயேசுவின் பாடுகளைத் தன் உடலில் சுமந்தவருமான புனித பிரான்சிஸ் அசிசியின் அடிச்சுவடுகளில் நடப்போம். புனித பொனவெந்தூர் செபித்துக் கொண்டிருந்தபோது சிலுவையில் அறையப்பட்ட இயேசு அவரிடம் என் ஆலயத்தை சரிசெய்யுங்கள் என்று கூறினார் இதை நமக்கு நினைவூட்டுவதற்கு மாமன்றம் உதவுகிறது. நம்முடைய தாயும் திருஅவை தூய்மைப்படுத்தப்பட வேண்டும். சரிசெய்யப்பட வேண்டும் ஏனென்றால் மன்னிக்கப்பட்ட பாவிகளாகிய நாம் இயேசு என்ற அடிப்படை ஆதாரத்திற்குத் திரும்பவும் அவருடைய நற்செய்தியால் அனைவரையும் சென்றடைய தூயஆவியின் பாதைகளில் நம்மை மீண்டும் ஈடுபடுத்தவும் நமது திரு அவைக்குத் தேவைப்படுகிறோம். புனித பிரான்சிஸ் அசிசியின் உலக சக்திகளுக்கு இடையில் நிறுவன மற்றும் மதவாத நீரோட்டங்களுக்கு இடையில் கிறிஸ்தவர்களுக்குப் பிற விசவாசிகளுக்கும் இடையில் பெரும் போராட்டங்கள் மற்றும் பிளவுகள் இருந்த காலத்தில் யாரையும் விமர்ச்சிக்கவோ அல்லது திட்டவோ இல்லை. பணிவு ஒற்றுமை செபம் தானம் ஆகிய நற்செய்தியின் ஆயுதங்களை மட்டுமே அவர் கையில் எடுத்தார். நாமும் அவ்வாறே செய்வோம்!

உலகெங்கிலும் உள்ள தங்கள் மேய்ப்பர்களுடன் கடவுளுடைய தூய மக்கள் நாம் தொடங்கவிருக்கும் மாமன்றம் பற்றி எதிர்பார்ப்புகள் நம்பிக்கைகள் மற்றும் சில பயங்களைக் கொண்டிருக்கின்றனர். இது ஒரு அரசியல் கூட்டம் அல்ல மாறாக ஒரு பட்டமளிப்பு விழா என்பதை நாம் தொடர்ந்து நினைவில் கொள்வோம். ஒரு பாராளுமன்றம் அல்ல மாறாக கருணை மற்றும் ஒற்றுமையின் இடம். பரிசுத்த ஆவியானவர் பெரும்பாலும் நமது கணிப்புகளையும் எதிர்மறைகளையும் மிஞ்சும் புதிய ஒன்றை உருவாக்க நம் எதிர்பார்ப்புகளை உடைக்கிறார். அவரிடம் நம்மைத் திறந்து முக்கிய பங்கு வகிக்கும் தூய ஆவியான அவரை அழைப்போம். அவரோடு நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் நடப்போம். எனக் கூறித் திருத்தந்தை மறையுரை-யினை நிறைவு செய்தார்.

## கனவு காண்போம்...

நான் ஏற்கனவே எழுதியதுபோல உய்த்துணர்வு ஒரு செப சூழலில் அதுவும் ஆழ்மௌன செப சூழலில் ஏற்படவேண்டும். இவற்றை உள்வாங்கிய சில மாற்றங்களை, திருத்தந்தை ஒருவரைத் தெரிவு செய்யும் படிமுறையில் போப் பிரான்சிஸ் இணைக்கக் கூடும்.

**("கனவு காண்போம்" என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரைத் தொடர் இக்கட்டுரையுடன் முடிவடைந்தாலும், போப் பிரான்சிஸ் அவர்களுடைய பாரிய கனவு நனவாகும் வழி தொடரும். நீளும், நாமும் அவருடன் இணைந்து பயணிப்போம்.)**




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

**கேள்வி: தற்போது வத்திக்கானில் நடைபெற்றுக்கொண்டிருக்கும்16வது ஆயர்கள் மாமன்றம் எவ்வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது? இந்த ஆயர்கள் மாமன்றத்தின் சிறப்பு என்ன?**

ப: சேவியர், இவ்வாயர்கள் மன்றத்துக்கான ஆயத்தங்கள் உலகளாவிய ரீதியில் பட்டிதொட்டியெல்லாம் கடந்த சுமார் ஈராண்டுகளாக நடந்திருக்கின்றது. அதன் உச்சக் கட்டமாகத்தான் ஆயர்கள் மாமன்றம் வத்திக்கானில் கூடியிருக்கின்றது. இவ்வாயர்கள் மாமன்றம் பல வகைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இன்று உலகம் எதிர்கொள்ளும்பல்வேறுபட்ட சவால்களைக் கண் முன் நிறுத்தி, இச்சூழமைவில் திரு அவை எவ்வாறு புளிக்காரமாகத் திகழ முடியும் என்பதைச் சிந்திப்பதாக இவ்வாயர்கள் மாமன்றம் கூட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாயர்கள் மாமன்றத்தில் பங்கேற்பாளர்கள் அமர்ந்திருக்கும் விதத்தைப்பாருங்கள்! திருத்தந்தை உட்பட மாமன்றத்தில் அமர்ந்திருக்கும் அத்தனை பேரையும் அவதானித்துப் பாருங்கள். வட்டமாக, சமமாக இருந்து கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தைப்பார்த்தாலே 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் சிறப்புப் புரியும்!

*(றமேஷ், மன்னார்)*

**கேள்வி: ரஸ்யா உக்கிரேனுக்கிடையில் தொடங்கிய சண்டை ஒருபக்கம் நடந்து கொண்டிருக்க, இன்னொரு பக்கம் இஸ்ரயேல் பாலஸ்தீன் நாடுகளுக்கிடையில் சண்டை தொடங்கியிருக்கின்றது. முடிவு எப்படி ஆகுமோ?**

பதில்: றமேஷ், விடிவில்லாத முடிவாகத்தான் இப்போர்கள் இருக்கப் போகின்றன. இன்றைய உலகில் இவ்வாறான மோதல்களைக் குறித்து வெட்கப்பட வேண்டி இருக்கின்றது: காரணம், பொருளாதாரத்தில் அறிவியலில் உச்ச வளர்ச்சியைக் கண்ட இந்நாடுகளும் இப்போருக்கு ஆதரவான நாடுகளும், வளர்ச்சியடைந்த இந்நாகரிக உலகில் இப்படி நடந் கொள்கின்றார்களே என்பதுதான்! இயற்கை வளம், மனித உழைப்புப் போன்றவற்றை மனித ஆணவம் அழித்தும் சிதைத்தும், இம் மனிதனை இந்தப் பூமி இன்னும் வைத்துப் பாதுகாத்துப் பராமரித்துக் காப்பாற்றி வருவது தான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறியது எதனைக் காட்டுகின்றது?**

ப: ஆனந்தன், இந்நாட்டில் வாழும் நீதிபதிக்கு மட்டுமல்ல, 'நீதி'க்கும் புகலிடம் வேண்டும் என்பதையே இது காட்டுகின்றது!

*(பாலன், கொழும்பு)*

**கேள்வி: இஸ்ராயேல்,பாலஸ்தீனம், கமாஸ் - சுருக்கமாகச் சொல்லுங்கள் பார்க்கலாம்?**

பதில்: பாலன், இஸ்ராயேல் என்பது எகிப்து, லெபனான், ஈரான், ஈராக், யோர்தான், குவைத், சவுதி அரேபியா, ஓமான், அம்மான், ஐக்கிய அரபு இராட்சியம் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுள் ஒன்று. பாலஸ்தீனம் என்பது இரு பகுதிகளாக இருக்கும்தேசம்:ஒன்று, காசாபிரதேசம்(நிலப் பரப்பு அல்லது துண்டு). மற்றையது, வெஸ்ற் பாங். காசாத் துண்டு, கமாஸ் அமைப்பினால் ஆட்சிசெய்யப்படுகின்றது. வெஸ்ற் பாங், பலஸ்தீன விடுதலை இயக்கத்தால் ஆளப்படுகின்றது. மிகவும் குறைந்த நிலப் பரப்பான காஸா எனப்படும் பிரதேசத்தில் (நீளம் 43 கிலோமீற்றர் அகலம் 11 கிலோ மீற்றர்) சுமார் 22 இலட்சம் மக்கள் வாழுகின்றார்கள். இந்நிலப்பரப்புக்குள் இருந்து கொண்டுதான் பாலஸ்தீனர்களின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிவரும் தீவிரவாத அமைப்பான கமாஸ் இயக்கம் 07.10.2023அன்று இஸ்ராயேலுக்கு எதிரான மோதல்களை ஆரம்பித்தது. அதற்குப் பதிலடியாக, கமாஸ் இயக்கத்தை இல்லாதொழிக்கப் போவதாகக்கூறி காசாப் பகுதியியைத் தொடர் விமானக் குண்டுத் தாக்குதலால் தரைமட்டமாக்கி வருகின்றது இஸ்ராயேல். இஸ்ராயேலின் விமானத் தாக்குதலின் பின்னர் இந்நகரம் பேய்களின் நகரமாகக் காட்சி அளிப்பதாகச் செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இப் போரில் ஆயிரமாயிரம் பாலஸ்தீனர்கள் செய்வதறியாது திணறிப்போய் நிற்கின்றார்கள். ஏற்கெனவே, பலநூறுபேர் கொல்லப்பட்டு விட்டார்கள்: இவர்களுள் பலநூறு குழந்தைகள், பெண்கள் அடங்குகின்றார்கள்.

(வரன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: கொழும்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு மல்கம் கார்டினல் றஞ்சித் ஆண்டகை 2020ம் ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்ட ஈஸ்ரர் குண்டுவெடிப்புத் தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என்றார். பின் சில நாட்களுக்குப் பின் உள்நாட்டு விசாரணை சரியாக நடைபெற்றால் சர்வதேச விசாரணை தேவையில்லை என்றார். இப்படி முன்னுக்குப் பின் முரணாகக் கதைக்கின்றாரே! இது எதனைக் காட்டுவதாகக் கொள்ளலாம்?**

ப: வரன், ஒன்று, வயதைக் காட்டுவதாகக் கொள்ளலாம்! அதாவது, வயது முதிர்ச்சியால் முன்னுக்குப் பின் முரணாகக் கதைப்பதாகக் கொள்ளலாம். அல்லது சர்வதேச விசாரணைக்குப் போனால் வடகிழக்கில் நடந்த கொடூரங்களுக்கும் சர்வதேச விசாரணையென்று வந்து, சம்மந்தப்பட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப் படுவதோடு, தமிழர்களின் சார்பாகவும் விடயங்கள் திசைதிரும்பிவிடும் என்ற பயத்தைக் காட்டுவதாகவும் கொள்ளலாம்!

*(அமல், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: நம் நாட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜேர்மனி நாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்குக் கொடுத்த நேர்காணலைப் பார்த்தீர்களா? அதனைப் பார்த்தால், தங்களின் மனப்பதிவைக் கூறமுடியுமா?**

ப: அமல், என்னுடைய மனப்பதிவு பலருடைய மனப்பதிவை ஒத்ததுதான்! ஆங்கிலத்தில் ஒரு கூற்று இருக்கின்றது: 'He made himself a fool' - 'அவன் தன்னைத்தானே ஒரு முட்டாளாக்கிக் கொண்டான்!' என்று தமிழில் அதனை மொழிபெயர்க்கலாம். இக்கூற்றுத்தான், மேற்சொன்ன நேர்காணலைப் பார்த்தபோது என் நினைவுக்கு வந்தது. ரணில் விக்கிரமசிங்க, அரசியலைக் கரைத்துக் குடித்தவரெனக் கூறப்பட்டாலும், 'ஆ(யா)னைக்கும் ஒருநாள் அடிசறுக்கும்' என்ற பழமொழியும் கூடவே நினைவில் வந்து நிழலாடியது. ஒரு ஜனநாயக சோஷலிச குடியரசின் ஜனாதிபதி எப்படி ஒரு சர்வாதிகாரியாக இருக்கின்றார் - செயற்படுகின்றார் என்பதும் அவருடைய நேர்காணலில் வெளிப்பட்டது!

(மது, யாழ்ப்பாணம்)

**கேள்வி: தொடர்ந்து புதைகுழிகளில் இருந்து மனித எச்சங்களே வருகின்றன. ஆனால், கடந்த மாதமும், பொறுப்புக்கூறல் திட்டத்தை முற்றாக நிராகரிக்கின்றோம் என ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாகக் கூறி விட்டது. தொடர்ந்து, நாட்டின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிநாடு ஒன்றில் வைத்தளித்த நேர்காணலில் சர்வதேச விசாரணையை முற்றாக நிராகரித்தார். இவை எதனைக் காட்டுகின்றது?**

ப: மது, செய்த பாவத்தைக் காட்டுகின்றது! அத்துடன் செய்துகொண்டிருக்கும், செய்யப்போகும் அடாவடித்தனங்களையும் காட்டுகின்றன! ஆனால், இவற்றுக்கு எல்லாம் இவர்கள் ஒருநாள் கணக்குக் கொடுத்தே ஆகவேண்டும்! 'யானை மண்ணைவாரித் தானே தனக்குமேல் போட்டுக்கொள்ளுமாம்' என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அதுவே இங்கும் நடக்கலாம்!

(றொஷான், யாழ்ப்பாணம்)

**கேள்வி: வெளிநாடுகளில் உங்களது 'அன்புள்ள ஆரியசிங்க' நூல் எத்தகைய வரவேற்பைப் பெற்றது எனக் கூறமுடியுமா?**

ப: றொஷான், உண்மையில் இந்நூலுக்கான வரவேற்பு நிறையவே இருந்தது - இருக்கின்றது. கனடாவில் எப்படி இருந்தது என்பதை ஏற்கனவே இன்னுமொருவரின் கேள்வியில் பகிர்ந்திருந்தேன். புலத்தில், குறிப்பாக, ஸ்கன்டிநேவிய - ஐரோப்பிய சமாதான முயற்சிகளில் ஈடுபடும் சில வெளிநாட்டு இராஜதந்திரிகள் இந்நூல்பற்றி முன்வைத்த கருத்துக்களைக் கேட்டபோது, எம் மண்ணில் எம் மக்கள் பட்ட துயரம் அவர்களின் கவனத்தை ஈர்த்திருப்பதோடு சர்வதேச மட்டத்தில் நம் நியாயங்களைச் சொல்ல இப்பேர்ப்பட்ட அனுபவப் பகிர்தல்கள் வலுச்சேர்க்கும் என்பதை மட்டும் என்னால் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இருப்பினும், என் பெறாமகனின் திடீர் இழப்பு, என் பயணத்தை இடைநடுவில் நிறுத்தித் தாயகம் திரும்ப வேண்டிய நிலைக்கு என்னைத் தள்ளியதால், இப்பயணம் முழுமை பெறாமல் போனது!

(தொடரும்...)

## "நீங்கள் இறந்து விட்டாலும் உடலளவில் நீங்கள் எங்களோடு இல்லாவிட்டாலும் நாங்கள் உங்களை ஒருபோதும் மறப்பதில்லை"

"ஒரு கிறிஸ்தவனின் மரணம் அழிவாகப் பார்க்கப்படுவதில்லை. அது வாழ்வுக்குச் செல்லும் வழியாகவே பார்க்கப்படுகின்றது. கத்தோலிக்க திருஅவை இறந்தவர்களை நினைவு கூரும் வகையில் அனைத்து ஆன்மாக்கள் தினம்" அல்லது "கல்லறைத் திருநாளை ஆண்டுதோறும் நவம்பர் 2ம் திகதி அனுஷ்டிக்கிறது.

இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு நாளாக அவர்களுக்காகச் சிறப்பாக இறைவேண்டல் செய்யும் ஒரு சிறப்பு தினமாக இந்நாளை நமக்குத் தந்திருக்கிறது. இந்தத் திருநாள் "நமது வாழ்வு முடிவுற ஒரு திருப்பயணம் என்பதை இந்த உலகத்துக்கு எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது. இறைவன் நமக்கு வழங்கியுள்ள வாழ்வு என்னும் அருட்கொடை மயானத்துடன் முடிந்து விடும் ஒரு மாயை அல்ல. மாறாக உண்மை, அன்பு, சகோதரத்துவம் என்னும் இறையாட்சியின் விழுமியங்களைக் கட்டியெழுப்ப நடத்தப்பட்ட போராட்டங்களின்கல்வெட்டுக் காப்பியங்கள் என்பதை நினைவுபடுத்துவதே இந்தத் திருநாள்.



சிலுவையிலே அறையப்பட்டு இறந்த இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவரோடு சேர்ந்து நாமும் ஒரு நாள் உயிர்தெழுவோம் என்ற நம்பிக்கையும் அவருடைய நடுத்தீர்வை நாள் பற்றிய விளக்கங்களும் நாம் வேதாகமத்திலே பார்க்கலாம்.

இறந்தோரிடமிருந்து இயேசுவை இறைவன் எழுப்பி உள்ளார். அந்த இயேசுவால் நமக்கு மீட்பும் ,உயிர்ப்பும் நிச்சயம் உண்டு. இயேசுவிடம் நம்பிக்கை கொள்பவர்கள் என்றென்றும் வாழ்வார்கள். இறப்புக்குப் பின்னர் இறை அமைதியில் நிம்மதி பெறவியலாத ஆன்மாக்களுக்குப் பாவங்கள் தடையாக இருக்கின்றன. முக்கியமாக உத்தரிக்கும் ஸ்தலத்திலே இருக்கும் தூய்மைப் படுத்தப்பட வேண்டிய ஆன்மாக்களுக்காக நாம் செபிக்கும் போது அவர்களுடன் எமக்கு உள்ள உறவை எடுத்துக் காட்டுகிறோம். அந்தப் பாவத்தளைகளில் இருந்து அவர்கள் விடுபட மன்றாட்டுகளும் திருப்பலி மற்றும் பிறர் மீது அன்பு செலுத்தும் பிறரன்புச் செயல்கள் மூலமும் அவர்களை நாம் ஆறுதல்படுத்த முடியும்.

கல்லறைத் திருநாளன்று எமது குடும்பத்தில் உறவுகளில் இறந்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளைச் சுத்தம் செய்து மலர்தூவி ,மலர்மாலை சூடி, மெழுகுதிரிகள் ஏற்றி ஊதுவத்தி கொளுத்தி வைப்பார்கள். ஒவ்வொருவரும் இறந்து போன அவரவர் சொந்தங்களை நினைத்து அவர்களுக்காகக் கண்ணீர் விட்டு ஜெபம் செய்வார்கள்.

ஒரு வகையில் இந்தக் கல்லறைத் திருநாள் நன்றியின் திருநாளாகவும் பார்க்கப்படுகின்றது. அதாவது "நீங்கள் இறந்து விட்டாலும் உடலளவில் நீங்கள் எங்களோடு இல்லாவிட்டாலும் நாங்கள் உங்களை ஒரு போதும் மறப்பதில்லை. உங்களை, உங்கள் செயல்களை நினைத்துப் பார்க்கிறோம். இறப்பு ஒரு போதும் நம்மைப் பிரித்து விட முடியாது. நமது உறவு என்றென்றும் தொடரும் எனும் செய்தியையே இந்தக் கல்லறைத் திருநாள் நமக்கு வெளிப்படுத்துகிறது.

"பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்" என்பார்கள் இன்று பணம் மனிதனை, உலகை ஆச்சரியப்படுத்துகின்றது. அந்த மனி தன் இறந்ததும் அதன் பலன் என்ன? அதைத்தான் இப்படிக் கூறுவார்கள் "ஒருவன் உலகை முழுவதும் தனதாக்கிக் கொண்டாலும் அவன் இறப்பானாயின் அதனால் கிடைக்கும் பயன் என்ன?" எதுவுமேயில்லை .

இன்றைய நாளிலே நமது உறவுகளுக்காக மன்றாடும் அதே வேளை, யாரும் நினையாத ஆன்மாக்களுக்காகவும் மன்றாடுவோம் இறைவன் நமக்குக் கொடுத்துள்ள மாபெரும் கொடை மாண்பு மிக்க வாழ்வு. அத்தகைய வாழ்வை நல்ல முறையில் வாழ நினைவூட்டுகின்றன கல்லறைகள்!

மரியஜெனோவா

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 29 . 07 . 1943 |  | 06 . 11 . 2022 |

அமரர்

## அருட்திரு ஜேக்கப் திருச்செல்வம் அ.ம.தி

அமரர் அருட்திரு ஜேக்கப் திருச்செல்வம் அ.ம.தி அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவில் அவரின் ஆன்ம சாந்திக்காக 06.11.2023 திங்கட்கிழமை பி.ப.5.00 மணிக்குக் கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இப்பலியில் பங்குபற்றி அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்க உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பாக
அருட்திரு ஜேக்கப் நீக்கிலஸ்

AD/62

# பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.
என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல்
என்றும் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன்.
நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும்
என்றென்றும் உமது முடிவில்லா
மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

(உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்த 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச் செபத்தைப் பிரிசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்)

(AD- 64 ) ஓர் அடியாள்.

# இளையோர் காவியம்

விழுந்து எனது வலது கை உடைந்து வேதனைப்பட்ட போது
எனக்குத் தென்பட்டது இறந்த அம்மாவினுடைய அவஸ்தை

எப்பவும் உயிராய் இருந்து கொண்டே
இருக்கும் உயிர்
உடல் சார்ந்ததே தவிர
உயிர் சார்ந்தது அல்ல

ஆயுள் உனக்கு இறந்து போன
உறவுகள் கூட துணை நிற்கும்
ஞானம் உள்ள கண்களுக்குத் தெரியும்
துணை நிற்கும் ஆவியின் உருவம்

நீ விழுந்த இடம்
வருங்காலம் காப்பாற்றப்பட்ட இடம்
விழுந்த இடத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது
அடுத்து வரப்போகிற ஆபத்து

நீ குழம்பிக்கொண்டே இருந்தால்
அதுவும் ஒரு படுகுழி
மன உறுதி என்பது
சோதனைக்கே வரவேணும் பயம்

உன் தனிப்பட்ட நல்ல காரியம்
பொது நலத்துக்கான நல்ல காரியம்
தடுக்க ஆளிருந்தால்
உடைக்க நீ இருக்கிறாய் என்று காட்டு

நீ சொந்தக் காலில் நின்றாலும்
கடவுளை நம்பி நில்
நிமிர முடியாமல் சரிக்கப்பட்ட
சரிவுகளைக்கூட நிமிர்த்துவான் கடவுள்

உயிரோவியன்

# விண்ணக வாழ்வின் 1ம் வருட நினைவஞ்சலி

"அஞ்சாதே நான் உன்னை மீட்டுக்கொண்டேன்
உன் பெயர் சொல்லி உன்னை அழைத்தேன்"

| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 25 . 05 . 1966 |  | 05 . 11 . 2022 |

## அருட்தந்தை அன்ரன் தேவராஜ் பிறெட்றிக்

தவமாய் தவமிருந்து பெற்றெடுத்தாள் அன்னை உன்னை
இறைவனுக்கே அர்ப்பணித்து இயன்ற வரை பணிபுரிந்தாய்.
இன்னல்கள் பல ஏற்றாய் இவ்வுலக வாழ்வினிலே
எடுத்துரைக்க வார்த்தையில்லை
ஏங்குதையா எம் இதயம் ஒரு வருடம் ஆனாலும்
உறங்கவில்லை உம் நினைவு
இறைவனவன் ஏனழைத்தான் விரைவாக வாவென்று
உறவுகள் நாம் இங்கிருந்து ஏங்குகின்றோம் உம் பிரிவால்
நம் மனதில் சிறு மகிழ்ச்சி எம்முடனே நீ வாழ்கின்றாய் என்று
இறைவனுடனே இணைந்து விட்டாய் இனி ஏதும் கவலையில்லை.
உன் ஆன்மா இளைப்பாறும் இறைவனின் சந்நிதியில்
என்று கூறி விடை பெறும் உம் இனிய சோதரர்கள்

AD-66 குடும்பத்தினர்

## போர் என்பது

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

தயவுகூர்ந்து இப்போரினை நிறுத்துங்கள், நிறுத்துங்கள் என்றும் விண்ணப்பித்தார். அக்டோபர் 27, வரும் வெள்ளியன்று உண்ணா நோன்பு, இறைவேண்டல் மற்றும் ஒறுத்தல் ஆகியவற்றுக்கு அழைப்பு விடுத்துள்ளதை நினைவுகூர்ந்த திருத்தந்தை, அதேநாளில் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் மாலை 6 மணிக்கு, நம் உலகில் அமைதி நிலவவேண்டி ஒரு மணி நேரம் செப வழிபாடு நடைபெறும் என்றும் கூறினார்.

## கிளிநொச்சி வியாகுல...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

பங்குத்தந்தை அருட்தந்தை நிக்சன் கொலின்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்து கன்னியர் மடத்தை ஆசீர்வதித்து திறந்து வைத்து திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறை மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## மெலிஞ்சிமுனை (1ம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 65 பிள்ளைகள் உறுதிப் பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

# மறக்க முடியாத நினைவில்

## 20ம் வருட நினைவஞ்சலி

| மலர்ந்தது | | ஜோதியானது |
|---|---|---|
| 14 . 05 . 1945 |  | 10 . 11 . 2003 |

அமரர்

### இராமநாதன் ஜெயசிங்கம்

(Attorney at Law, Notary Public, J.P.U.M & Commissionar of Oaths

ஆண்டவர் என் ஆயன் எனக்கேதும் குறையில்லை.
எம் நெருக்கடி வேளையில் எம் மகிழ்ச்சியில்
எம் தலைவராக அருகில் இருக்கும் எம் ஆண்டவர்
போற்றி, போற்றி. வாழ்நாளெல்லாம் அவர் அன்பு தொடரும்
நீங்கள் பறிக்கப்பட்டு அகவை இருபது மாயமாய் மறைந்தன.

## 36ம் வருட நினைவஞ்சலி

| மலர்ந்தது | | ஜோதியானது |
|---|---|---|
| 14 . 03 . 1972 |  | 19 . 10 . 1987 |

அமரர்

### ஜெயசிங்கம் சோபனா

(Holy Family Convent - Student)

குழலினில் இனிய பேச்சு
குவிந்திடும் உதட்டில் ஞானம்
விதி உன்னைக் கொண்டு சென்று
முப்பதாறாண்டுகள் ஆனாலும்
மறப்போமோ எம் வாழ்வில்

ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதிகாண ஆண்டவனை நிதமும் இறைஞ்சுசின்றோம்.

AD-65) குடும்பத்தினர்

# முல்லைத்தீவு மறைக்கோட்ட பொதுநிலையினர் எழுச்சி நாள்





முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட தேசிய பொதுநிலையினர்தினம் மற்றும் முல்லைத்தீவு மறைக் கோட்ட பொதுநிலையினர் எழுச்சி நாள் நிகழ்வுகள் 15ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியி ருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றன. முல்லைத் தீவு மறைக்கோட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்கு-படுத்தலில் கழகத் தலைவர் திரு. சூசைமுத்து அவர்க ளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளின் ஆரம் பத்தில் முல்லைத்தீவு மறைக்கோட்டக் கத்தோலிக்க ஆசி ரியர் சங்க அங்குரார்ப்பணமும் பொதுநிலையினர் கழகத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக் கான பரிசில்கள் வழங்கலும் இடம்பெற்றன.

தொடர்ந்து யாழ். மறை மாவட்டப் பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மௌலிஸ் அடிகளார்தலை மையில் சிறப்புத் திருப்பலியும் திருப்பலி நிறைவில் அந் நாளை சிறப்பிக்கும் முகமாக ஆலய வளாகத்தில் மரக்கன்று களும் நாட்டி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்டப் பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்-தந்தை மௌலிஸ் அவர்கள் பிரதம விருந்தினராகவும் ஓய்வு நிலை அதிபர் திரு.அல்பிரட் அவர்கள் சிறப்பு விருந்தி-னராகவும், அமைதித்தென்றல் இயக்குநர் அமலமரித்-தியாகிகள் சபையை சேர்ந்த அருட்தந்தை அன்ரனி பொன்சியன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததுடன் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மறைமாவட்ட பொதுநிலையினர்கழக பிரதிநிதிகள், முல்லைத் தீவு மறைக்கோட்ட கத்தோலிக்க ஆசிரியர்கள், மற்றும் இறை மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கிளிநொச்சியில் வியாகுல அன்னை ஊழிய சபை உதயம்



யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்ற இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள புனித வியாகுல அன்னை மரியின் ஊழிய சபை அருட்சகோதரிகள் தங்கள் பணியை கிளி நொச்சி மறைக்கோட்டத்திலுள்ள தர்மபுரம் பங்கில் ஆரம்பித்துள்ள நிலையில் அவர்களு டைய கன்னியர் மட திறப்பு விழா 11ஆம் திகதி நடைபெற்றது. (தொடர்ச்சி ...7ம் பக்கம்)

# அமலமரித் தியாகிகளின் புதிய திருநிலையினர்



யாழ். மாகண அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த திருத்தொண்டர் மற்றும் அருட்சகோதரருக்கான திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு 05ஆம் திகதி கொழும்புத்-துறை புனித இயூஜின் டி மசெனட் சிற்றாலயத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற திருநிலைப்படு-த்தல் திருச்சடங்கு திருப் பலியில் திருத்தொ-ண்டர் கிறேசியன் றெமோசன் அவர்கள் குருவாகவும் அருட்சகோதரன் ஜேம்ஸ ராஜகுலேந்திரன் ராஜ ஜெனிஸ்ரன் அவர்கள் திருத் தொண்டராகவும் திருநிலை-லப்படுத்தப்பட்டனர்.

# ஆனையூர் சிறார்கள் பொருளுதவி



ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலய சிறார்கள் தம் பெற்றோர்களிடமிருந்து சேகரித்த உணவுப் பொருட்களை உடுவில் ஆர்க் சிறுவர் இல்லத்தில் வாழும் மாற்றுத்திறன் கொண்ட சிறார்களுடனும், கொழும்புத்-துறை முதியோர் இல்லத்தில் வாழ்வோரோடும் மற்றும் தேவையில் உள்ள குடும்பங்களுக்கு நல்லாயன் அருட் சகோதரிகள் ஊடாகவும் பகிர்ந்து கொண்டனர்.

அருட்பணி A.ஞானப்பிரகாசம் அடிகளாரின் வழிகாட் டலில் செயற்படுத்தப்பட்ட சிறார்களின் இத் திட்டம் பலரா லும் பாராட்டப்பட்டது.

# சுன்னாகத்தில் புனித வின்சன்ற் டி போல் சபை



சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் வின் சென்ற் டி போல் சபை அங்குரார்ப்பண நிகழ்வு 08ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனி பாலா அவர்களின் தலைமையில் இடம்பெற்றன. யாழ்.மறை மாவட்ட வின்சென்ட் டி போல் சபை ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களும் மத்திய சபையின் உபதலைவர் திரு. நியூட்டன் அவர்களும் கலந்து சிறப்பி-த்ததுடன் உறுப்பினர்களுக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. யாழ். மறைமாவட்டத்தின் 51ஆவது பந்தியாக புனித அந்தோனியார் பந்தி என்னும் பெயரில் இப்பந்தி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# நாவாந்துறையில் தேசிய இளையோர் வாரம் அனுஷ்டிப்பு



தேசிய இளையோர் வாரத்தை முன்னிட்டு நாவாந்-துறை புனித நீக்கிலார் ஆலய இளையோர் ஒன்றியத்தி-னரால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு 15ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை யேசு ரட்ணம் அவர்களின் வழிகாட்டலில் இளையோர் ஒன்றியத் தலைவர் செல்வன் றெக்னோ அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காலை சிறப்புத் திருப்பலியும் தொடர்ந்து இளையோருக் கான ஒன்றுகூடலும் இடம்பெற்றன. அத்துடன் அன்றைய நாளை சிறப்பிக்கும் முகமாக இளையோர்கள் உடுவில் பிரதேசத்திலுள்ள ஆர்க் மாற்றுத் திறனாளிகள் இல்லத்தை தரிசித்து அங்கு நடைபெற்ற மகிழ்வூட்டல் நிகழ்வுகளி லும் பங்குபற்றினார்கள்.

# மல்வம் மரியாயின் சேனையினரின் பிரசீடிய விழா



மல்வம் திருக்குடும்ப ஆலய மரியாயின் சேனையினரால் முன்னெடுக்கப்பட்ட பிரசீடிய விழா பங்குத்தந்தை அருட்-தந்தை அருட்செல்வன் அவர்க ளின் வழிநடத்தலில் 15ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் புனித சவேரியார் உயர் குருத்துவ கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை ரவிராஜ் அவர்களின் தலைமை யில் நடைபெற்ற சிறப்புத் திருப்பலியைத் தொடர்ந்து அன்று மாலை மரி யாயின் சேனை அங்கத்தவர்கள், மாதகல் லூர்து அன்னை கெபிக்கு கள அனுபவ பயணம் மேற்கொண்டனர்.

அங்கு நடைபெற்ற சிறப்பு வழிபாடு பாட்டிலும், கருத்துப் பரிமாற்ற-த்திலும், கலைநிகழ்வுகளிலும் பங்கு பற்றினர். இந்நிகழ்வில் மாதகல் பங்குத்தந்தை அருட்தந்தை றோய் பேடி னன் அவர்கள் கலந்து சிறப் பித்ததுடன் 30ற்கும் அதிகமான மரியா யின் சேனை உறுப்பினர்கள் கலந்து பயனடைந்தனர்.

# புனித அசீசியார் வருடாந்தத் திருவிழா



பொதுநிலை பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையினரால் முன்னெடுக்க-ப்பட்ட புனித பிரான்சிஸ் அசீசியார் வருடாந்தத் திருவிழா 04ஆம் திகதி புதன்கிழமை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை அருள்தாசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

திருவிழாத் திருப்பலியை யாழ்.மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்-தந்தை ஜெபரட்ணம் அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். அத்துடன் புனித பிரான்சிஸ்கன் 3ஆம் சபை பொதுநிலையினர் குழு மத்திற்கான புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் திருச் சடங்கு கடந்த மாதம் 28ஆம் திகதி இடம்பெற்றதுடன் அங்கத்தவர் களுக்கான தவ உடையும் வழங்கி வைக்கப்பட்டது.

# வெள்ளிவிழாத் தம்பதியினர் கௌரவிப்பு

உருத்திரபுரம் பங்கில் முன்னெடுக்கப்பட்ட திருமண வாழ்வில் 25 வருடங்களை நிறைவு செய்தவர்களுக்கான சிறப்பு நிகழ்வு 14 ஆம் திகதி கடந்த சனிக்கிழமை நடை-பெற்றது. பங்குத்தந்தை அருட்-தந்தை போல் அனக்கிளிற் அவர் களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புத் திரு-ப்பலியும் தொடர்ந்து தம்பதியி-னருக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றதுடன் 50 வரையான தம்பதியினர் பங்குபற்றிப் பயன டைந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.